பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 28 செவ்வாய்க்கிழமை 13.09.2022 கதிர் 310

இது ரகசியம் அல்ல!

"முழிந்தால்மொட்டுவில்இருந்து எங்களை நீக்கிக் காட்டுங்கள்!" - என்று டலஸ் தரப்பு எம்.பியான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மொட்டுக் கட்சியின் நிர்வாகிகளுக்கு சவால் விட்டு இருக்கின்றார் என்பதை நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். ☞2

# இலங்கையின் நிலைமை குறித்து சர்வதேச நாடுகள் கவலை, விசனம்

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் குறித்து பல தரப்புகளும் கண்டனக் குறிப்புகள்



பதில் ஆணையாளர் நாதா அல் நஷீப்

ஜெனிவா,செப்ரெம்பர் 13

வெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது அமர்வில் இலங்கை நிலைமை குறித்து சர்வதேச நாடுகள் பலவும் கவலை மற்றும் விசனம் தெரிவித்தனர்.

இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருப்பது குறித்து பல தரப்புக்களும் கடும் கண்டனம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. ☞9



## 13 இன் முழு நடைமுறையாக்கத்தையே ஜெனிவாவில் வலியுறுத்தியது இந்தியா!

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவும், மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவும் இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வில் பேசிய இந்திய பிரதிநிதி, பொருளாதார மீட்சிக்கு இந்த அதிகாரப் பகிர்வும் இலங்கை இனப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வும் தேவை என வலியுறுத்தினார்.

இதேவேளை பொறுப்புக்கூறல், உண்மை மற்றும் நீதிக்காக வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நீண்ட ☞2




## ஜெனிவா நகர்வுகளை நிராகரித்தது இலங்கை






இலங்கை மக்களின் இறையாண்மையையும் ஐக்கிய நாடுகளின் சாசனத்தையும் ☞2

## மட்டு. மாவட்டத்தில் 10 பேர் விசாரணைக்காக அழைப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மற்றும் ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் பெண்கள் உட்பட 10 பேர் கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ☞9

## பளையில் 110 ஏக்கர் காணி 22 பிரமுகர்களுக்கு வழங்கியமை குறித்து துருவுகிறது அமைச்சரவை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.13

பளைப் பகுதியில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் காணியில் ஆளும் கட்சி அரசியல் செல்வாக்கில் 22 பேருக்கும் வழங்கிய 110 ஏக்கர் காணி தொடர்பில் உடன் மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கக் காணி பகிர்ந்தளிப்பதற்கான குழுவிற்கு அமைச்சரவை உத்தரவு பிறப்பித்துள்ளது. ☞2

## இலங்கைக்கு சீனா ஆதரவு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தின் சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி சென்ஸ்கு தெரிவித்துள்ளார். ☞9



## திருக்கோணேஸ்வரத்தில் அத்துமீறல்களை தடுக்க நேற்றைய அமைச்சரவையில் முடிவு!

### அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்குக் கைமேல் பலன்

கொழும்பு,செப்.13

வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியின் புனிதத்தைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதான செய்திகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எந்தவொரு மதத்தினரின் உணர்வுகளையும் பாதிக்கும் வகையிலான ☞2



## மனித உரிமை ஆணையரின் மிக உறுதியான அறிக்கைக்கு தமிழ்த் தரப்பின் ஒருமித்த நிலைப்பாடே முக்கிய காரணம்!

### ஜெனிவாவிலிருந்து ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவிப்பு

ஜெனிவா,செப்.13

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உறுதியான அறிக்கைக்குத் தமிழ் தரப்பின் ஒருமித்த நிலைப்பாடே முக்கிய காரணம் என ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வுகளை ஒட்டிய நிகழ்வுகளில் பங்குபற்ற அங்கு சென்றிருக்கும் ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

அவர் நேற்று அங்கிருந்தபடி தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

இன்று 12 செப்ரெம்பர் மாதம் 2022 ஆரம்பித்துள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை மீதான ☞2



## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதை வாசித்த போது, ஒரு சினிமா படத்தில் ஒரு பெரியவரை ஒரு சின்னப் பையன் 'வாடா! வாடா!' என்று ஒருமையில் கூறி வம்புக்கு இழுக்க, அந்தப் பெரியவரோ நமக்கேன் வீண் சிக்கல் என்று ஒதுங்க, இடையில் வடிவேலு தொலுக்கு முதலி போல புகுந்து, அந்தச் சிறுவனைத் துரத்திச் சென்று, வாகனத்தில் சிக்கி, தன் கிட்னியைப் பறிகொடுத்த நகைச்சுவைக் காட்சி தான் எனக்கு நினைவுக்கு வந்தது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

கிட்னி பிடுங்குவதற்கு அந்தப் பையன் வம்புக்கு இழுத்த மாதிரி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மொட்டுக்கட்சித் தலைமையை வம்புக்கு இழுக்கின்றார் – சீண்டுகின்றார் – என்கிறேன் நான்.

அதெப்படி என்று புரிகின்றதா வாசகர்களே? ஊகித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டிருந்தேன்.

எனக்கு நேற்று தொலைபேசி அழைப்பு எடுத்த எந்த வாசகரும் என் கருத்தைச் சரியாக ஊகிக்கவில்லை.

பேராசிரியர் பீரிஸ் அப்படி சவால் விட்டு அழைத்தமைக்கு முக்கியமான காரணம் உண்டு.

பீரிஸும் டலஸ் அழகப்பெருமாவும், அவரது குழுவினரும் இப்போது தாங்கள் தனியாக சுயாதீன அணியாகச் செயல்படுகின்றனர் என்று அறிவித்திருந்தாலும் கூட, அது அங்கீகரிக்கப்பட்ட நிலைமை அல்ல. தொடர்ந்தும் அவர்கள் மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களாகவே பார்க்கப்படுவர். நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு நேரத்திற்குக் கூட மொட்டு கட்சியின் கொறடாவிடம் தான் – அவரின் சகாயத்தில் தான் – அவர்கள் தங்கி இருக்க வேண்டும். சட்டப்படி மொட்டுக்கட்சி எம்.பிக்கள் என்ற கட்டுப்பாட்டில் இருந்து அவர்கள் இலகுவாக விலகி விட முடியாது.

ஆனால், தப்பித் தவறி கட்சி தானாக அவர்களை வெளியேற்றுவது என்று முடிவெடுத்து, அதை உத்தியோகபூர்வமாக அறிவித்து, அதன் அடிப்படையில் அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையையும் இழக்கச்செய்ய கட்சி நடவடிக்கை எடுக்குமானால், அப்படி உறுப்புரிமையை இழக்க செய்யும் கட்சியின் முடிவுக்கு எதிராக சம்பந்தப்பட்ட எம்.பியோ, எம்.பிக்களோ நீதிமன்றத்திற்கு போய், அந்த முடிவைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தலாம். அந்த வழக்கு விசாரணை முடிவடையும் வரை அவர் அல்லது அவர்கள் எம்.பியாக நீடிப்பர். வழமையாக இத்தகைய வழக்குகள் விசாரித்து முடிவதற்குள் நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைந்து விடும். ஆகவே எம்.பி. பதவி பெரும்பாலும் இந்தச் சட்டச் சவால் காரணமாக பறி போகாமல் நீடிக்கும்.

ஆனால், தங்களை கட்சியிலிருந்து வெளியேற்றி விட்டிருப்பதாக கட்சியே அறிவித்திருக்கின்றமையால் நாங்கள் இப்போது சுயாதீன எம்.பிக்கள், கட்சி சாராது சுயாதீன எம்.பியாகச் செயற்படுவதுக்கு சபாநாயகர் அங்கீகாரம் தர வேண்டும் என்று அந்த எம்பிக்கள் கோரினால், அந்த சுயாதீனத்தை சபாநாயகர் அங்கீகரித்தே ஆக வேண்டும்.

அப்படி தங்களின் சுயாதீன நிலையின் செயற்பாட்டை உறுதிப்படுத்தவே 'துணிவிருந்தால் எங்களை கட்சியிலிருந்து நீக்கிப் பாருங்கள்!' என்று மொட்டுக் கட்சிக்கு சவால் விடுகின்றார் பேராசிரியர் பீரிஸ்.

தான் மறைவாக வைத்திருக்கும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காகத்தான் அந்த கிட்னி திருடும் பையன் போல மொட்டுக்கட்சிக்கு அழைப்பு விடுத்து, சவால் விட்டுச் சுரண்டுகிறார் அவர் என்பதுதான் யதார்த்த நிலைமை.

ஆனால், மொட்டுக் கட்சியா, கொம்பா? இந்தச் சவாலுக்கு எல்லாம் முகம் கொடுத்த கட்சி அது. பீரிஸின் அழைப்புக்கு அக்கட்சி மசியாது என்பதுதான் நிலைமை.

- மின்னல் -

## பளையில் 110 ஏக்கர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிச் சீர்சீருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாகப் பளைப் பகுதியில் உள்ள நிலத்தை நிலமற்ற ஏழை மக்களிற்கு அல்லது காணாமல்போனோரின் உறவுகளிற்கு அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் வீதம் பகிர்ந்தளித்திருக்க முடியும்.

இருப்பினும் தென்னிலங்கை அரசியல் கட்சியின் ஆதரவாளர்களிற்கும் பணம் படைத் தோரையும் கொண்ட 22 பேரினுடைய பட்டியலிற்கு உணவு உற்பத்தி என்னும் பெயரில் இந்த நிலத்தை பகிர்ந்தளித்துள்ளனர்.

இது தொடர்பில் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளதாக நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியபோது அப்படி வழங்கப்பட்டதனை உரிய அமைச்சு ஏற்றுக்கொண்டது எனத் தெரிய வந்தது.

இதனையடுத்து இதன்போது நிலம் வழங்கப்பட்டவர்கள் தொடர்பிலும் வழங்கியமை தொடர்பிலும் ஆராய்ந்து அவர்களின் தகுதி மற்றும் தேவை தொடர்பில் தனியான அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்..

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி விசுவாசியான கொக்குவில்

தொழில் நுட்பக் கல்லூரியின் முன்னாள் அதிபர் யோகராஜன் ஊடாக தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிபார்சிலேயே இந்த 22 பேருக்கும் தலா 5 ஏக்கர் நிலம் வீதம் வழங்கப்பட்டுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது.

இதில் யோகராஜன், அவரது மனைவி, மகள், மருமகன் என நால்வரின் பெயரிலும் தனித்தனியே நிலம் வழங்கப்பட்டுள்ளதோடு, யாழ்ப்பாணம் மாநாகர சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினரும் சட்டத்தரணியுமான மு.ரெமீடியஸ், அவரது மனைவி ஆகிய இருவருக்கும் தலா 5 ஏக்கர் நிலமும்,

ஆயுள்வேத வைத்தியரும், வைத்தியசாலைப் பதிவாளருமான ஜெலன் மற்றும் அவரது மனைவி ஆகியோருடன், ஓய்வு பெற்ற கணக்காளர் இராசநாயகம், பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இரத்தினசிங்கம், பதிவாளரும் யாழ்ப்பாணம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உத்தியோகத்தரின் உடன் பிறந்த சகோதரரான புத்தூரைச் சேர்ந்த கோபால கிருஷ்ணன்,

சங்கானையில் வங்கி முகாமையாளர் போன்றவர்களுடன், யாழில உள்ள மத்திய கணக்காய்வாளர், வடமராட்சியைச் சேர்ந்த மணிவண்ணன் மற்றும் காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த தங்கராஜசிங்கம் ஆகியோருக்கே இந்த நிலங்கள் வழங்கப்பட்டுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது.

## 13 இன் முழு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக கோரிக்கை விடுத்த போதிலும், மிகக் குறைவான முன்னேற்றமே ஏற்பட்டுள்ளதாக சுவிட்சர்லாந்து கவலை வெளியிட்டுள்ளது.

## ஜெனிவா நகர்வுகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறுவதால் 46/1 தீர்மானத்தை இலங்கை திட்டவட்டமாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தீர்மானம் மற்றும் உயர்ஸ்தானிகரின் அது தொடர்பான பரிந்துரைகள் மற்றும் எந்தவொரு தொடர் நடவடிக்கைகளையும் திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இலங்கை உள்ளது என்றார் அவர்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் நேற்று இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக, விரிவான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இலங்கை கொண்டுவரும் எனவும் அவர் உறுதியளித்தார்.

## திருக்கோணேஸ்வரத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளையும் அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்தினை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே பத்திரிகை செய்தி மூலம் தாம் அறிந்திருந்தார் எனவும், அது தொடர்பாக நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மதவிவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சரும் இணைந்து திருகோணமலைக்கான களவிஜயத்தினை மேற்கொண்டு நிலமைகளை நேரடியாக ஆராய்வதுடன், ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி, இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் நேற்றைய அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

## மனித உரிமை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோக பூர்வ வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வறிக்கையில் கூட்டாக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து கடந்த செப்டெம்பர் 2021 இல் இருந்து முன்வைத்து வந்த அநேக விடயங்கள் உள்வாங்கப் பட்டிருந்தன.

உதாரணமாக முக்கிய பிரச்சினைகளாக நாங்கள் சுட்டிக் காட்டி வந்தவையான –

* அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் உட்பட நிர்வாகங்களை இராணுவமயப்படுத்தல் – குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் அரச நிர்வாகம், சட்ட ஒழுங்கு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிகமாக இராணுவமே ஈடுபடுவது.

* கட்டுமீறிய இராணுவச் செலவீனங்கள், நிதி ஒதுக்கீடுகள்.

* குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருக்கும் அதீத இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல்.

* காணி அபகரிப்பை நிறுத்தி இராணுவ வசமுள்ள காணிகளை விடுவித்தல்.

* மொழி, மதரீதியான பெரும்பான்மை சிந்தனையோடு செயல் ஆற்றுதல், ஆதிக்க சிந்தனையோடு எழுப்பப்படும் மத சின்னங்கள்.

* குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் நினைவேந்தல் முயற்சிகளில் ஈடுபட்டவர்கள், புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் ஆகியோரை, புலனாய்வுப் பிரிவுகள், இராணுவம் மற்றும் பொலிஸ் கண்காணிப்பு, அச்சுறுத்தல், துன்புறுத்தல் பற்றிய விடயங்கள்.

– இவற்றுடன் மேலும் பல விடயங்களை நாம் அறிக்கையிட்டு இருந்தமையை உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் உள்வாங்கியுள்ளார்.

மிக விவரமான, உறுதியான அறிக்கையாக இது அமைந்துள்ளமை வரவேற்கத் தக்கது.

ஒருமித்த நிலையில் தமிழ் தரப்பினர் அறிக்கை சமர்ப்பித்தமையை ஐ.நா. கவனத்தில் கொண்டுள்ளதை நாங்கள் அவதானிக்க வேண்டும்.

நாம் எழுதிய கடிதங்கள் ஐ.நாவினால் கரிசனை கொள்ளப்பட மாட்டாது என்றும், ஒரு சிலருடைய கையெழுத்துக்களுக்கு மாத்திரம் ஐ.நா. கரிசனை கொள்ளும் என்றும் சிலர் சொல்லிவந்த கருத்தினை இவ்வறிக்கை பொய்ப்பித்துக் காட்டியுள்ளது.

ஐ.நா. என்பது ஒரு சிலருக்கோ, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கோ மாத்திரம் சொந்தமானது அல்ல. அது பாதிக்கப்பட்டவர்களுடைய குரலுக்கே செவிசாய்க்கும் என்பதை இவ்வறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

இப்போது மனித உரிமைப் பேரவையில் உள்ள அங்கத்துவ நாடுகள் சர்வதேச நீதிமன்றத்திற்கு குற்றவாளிகளைப் பாரப்படுத்த வேண்டும் என்று அனைத்து தமிழ் தரப்பினரும் ஒருமித்த – ஒன்றிணைந்த – கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை, மனித உரிமைப் பேரவையில் உள்ள அங்கத்துவ நாடுகள் கொண்டுவர இருக்கும் பிரேரணையில், உள்வாங்க வைக்கும் முயற்சிக்கு தமிழ் மக்கள் ஒருமித்த நிலையில் தொடர்ந்தும் செயல்படுவது வலுச் சேர்க்கும்.

உயர்ஸ்தானிகரின் அறிக்கை மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட இருக்கும் பிரேரணையில் பெரும் செல்வாக்கு செலுத்தும்.

நாம் கோரி நிற்கும் நீதியை பெற்றுக் கொள்ள, கோரிக்கை முன்வைத்த அனைத்து தரப்பினரும் தொடர்ந்தும் ஒருமித்து செயலாற்றுவது அவசியம்.– என்றார் அவர்.






# ஐ.நா. பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரை அரசாங்கம் சிறந்த முறையில் வெற்றிகொள்ளும்!

## தாரக பாலசூரிய நம்பிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரை அரசாங்கம் சிறந்த முறையில் வெற்றிகொள்ளும்.

சர்வதேசத்துடன் அரசாங்கம் இணக்கமாகவே செயற்படும். சட்ட ஒழுங்கைப் பாதுகாக்க சட்டத்தை அமுல்படுத்துவதை அரச பயங்கரவாதம் என எவ்வாறு குறிப்பிடுவது? அது முற்றிலும் தவறானது என வெளி விவகாரத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டுமக்களின்பேச்சுரிமையையும், அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் அரசாங்கம் ஒருபோதும் முடக்கவில்லை. ஜனநாயகம் என்ற பெயரில் சட்டத்துக்கு முரணாக வன்முறையில் ஈடுபட எவருக்கும் இடமளிக்க முடியாது.

காலி முகத்திடல் போராட்டத்தில் ஒரு தரப்பினர் ஜனநாயக ரீதியில் அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஜனநாயகப் போராட்டத்தை பிறிதொரு தரப்பினர் ஜனநாயகத்துக்கு முரனாக செயற்பட்டார்கள். பொதுச் சட்டத்தையும், சட்ட ஒழுங்கையும் பாதுக்காக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரை அரசாங்கம் சிறந்த முறையில் வெற்றிக்கொள்ளும். நாட்டின் பொதுச்சட்டத்துக்கமையவே அரசாங்கம் செயற்படும்.சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்படுவது அத்தியாவசியமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தை ஒருபோதும் பகைத்துக்கொள்ள மாட்டார். சர்வதேசத்தின் ஒத்துழைப்பைக் கோரி நிற்கும் போது சர்வதேசத்தை பகைத்துக் கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. சட்டத்துக்கு முரணாக செயற்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அதனை எவ்வாறு அரச பயங்கரவாதம் எனக் குறிப்பிடுவது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசியல் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளோம். அனைத்து நெருக்கடிக்களுக்கு மத்தியிலும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. – என்றார்.

# தேசிய பூங்காக்களுக்கான நுழைவுக் கட்டணத்தை இருமடங்காக்கியது வன விலங்குத் திணைக்களம்!

## சுற்றுலாப் பயணிகள் விசனம்

தேசிய பூங்காக்களுக்கான நுழைவுக் கட்டணத்தை வனவிலங்குத் திணைக்களம் இருமடங்காக உயர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவால் சுற்றுலாத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு முன்னர் ஒருவருக்கு 9 ஆயிரத்து 688 ரூபாவாக இருந்த கட்டணம் தற்போது 5 ஆயிரத்து 232 ரூபாவால் அதிகரித்து 14 ஆயித்து 920 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுற்றுலாத் துறையினர் கூறுகையில், பூங்காக்களில் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத நிலையில் இவ்வளவு தொகையை வசூலிப்பதை ஏற்க முடியாது எனவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 37 ஆயிரத்து 760 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர், இது ஒகஸ்ட் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 649.2 சதவீத வளர்ச்சியாகும்.

இதற்கமைய, ஒகஸ்ட் மாத இறுதிக்குள் இதுவரை 4 லட்சத்து 96 ஆயிரத்து 430 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## வடக்கும் கிழக்கும் பினாங்கும்

**அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவரை ஏனைய எதிர்க்கட்சி தலைவர்களுடன் சந்தித்த தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஒரு விடயத்தை அப்பட்டமாகச் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.**

**"இன்று நாட்டில் இருப்பது பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, அதையும் மீறிய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி ஆகும். இதற்கு மூல காரணம் இன்னமும் தீராமல் இருக்கும் தேசிய இனப் பிரச்சினையாகும்; இந்த நாடு சிங்கள, பௌத்த நாடு என்ற நிலைப்பாடு மாறாமல் இருப்பதாகும்" – இப்படி யதார்த்தப் புற உண்மையைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி இருக்கிறார் மனோ கணேசன்.**

**உலகிலே வலிமையான புலம்பெயர் சமூகத்தை கொண்ட நாடுகளில் ஒன்று இலங்கை. அதன் விஸ்தீரணத்துடனும், ஜனத்தொகையுடனும் ஒப்பிடும்போது அதன் புலம்பெயர் சமூகம் – தமிழர், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என மூவினத்தையும் கொண்ட புலம்பெயர் சமூகம் – ஏனைய நாடுகளை விட உயர்ந்தது; வலிமையானது.**

**ஆனால் பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து கிடக்கும் இலங்கை நாடு, இத்தகைய வலிமையான புலம்பெயர் சமூகத்தை வைத்திருந்தும் கூட பொருளாதார மீட்சிக்கான வெளிநாட்டு முதலீடுகளை பெற முடியாமல் தடுமாறுகின்றது.**

**இதற்குக் காரணம் என்ன? மனோ கணேசன் கூறிய காரணம்தான். பேரினவாத மேலாண்மை வெறிப் போக்குத்தான் இவ்வளவுக்கும் பின்னணி.**

**இத்தகைய தமிழர் விரோதப் போக்கு மலேசியாவிலும் அரசு நிர்வாகத்தில் உண்டு.. ஆனால் அந்த நாடு பொருளாதாரத்தில் இந்த இனவாதத்தை தலைதூக்க விடவில்லை.**

**மலேசியாவை தூக்கி நிறுத்தக் காரணமான பொருளாதார மண்டலம் பினாங்கு மாநிலமதான். தமிழர்கள் செறிந்து வாழும் அந்த மாநிலத்தில்தான் அது அமைந்துள்ளது. கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் 2020 ஆம் ஆண்டு 16.9 பில்லியன் டொலர் அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்று பினாங்கு மாநிலம் வரலாற்றுச் சாதனை படைத்தது.**

**இலங்கையில் இது ஏன் சரிவரவில்லை? வலிமையான தமிழ்ப் புலம்பெயர் சமூகத்தைக் கொண்ட வடக்கு, கிழக்கு ஏன் இன்னொரு பினாங்கு மாநிலமாக மாறவில்லை?**

**பேரினவாதத்தின் மேலாண்மை அடக்குமுறைதான் காரணம். உதாரணத்துக்கு பயனற்ற மத்தள விமான நிலையத்தின் பயணிகளுக்கு விமான நிலைய வரியை முழுமையாகத் தளர்த்தியிருக்கும் இலங்கை அரசு, வடக்கில் பலாலி விமான நிலையத்துக்கான பயணிகள் வரியை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு ஒப்பாக உயர்த்தி வைத்திருக்கிறது.**

**இத்தகைய விடயங்களில் இப்போதுதான் தென்னிலங்கை தலைவர்களுக்கு ஓரளவேனும் 'ஞானம்' பிறந்து உண்மை புரியத் தொடங்கியிருக்கிறது.**

**நேற்று முன்தினம் அதே சமந்தா பவரைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு பாரிய பொருளாதார மையமாக மாற்றப்படும் என்று உரைத்திருக்கின்றார்.**

**இது எப்போதோ செய்திருக்க வேண்டிய காரியம். இந்த முயற்சி வெற்றி பெற்று, வடக்கு பாரிய பொருளாதார மையமானால் – வடக்கு உயர்ந்தாலும், மேம்பட்டாலும், வருமானம் முழு இலங்கைக்கும் சேர்த்துத்தான் என்ற உண்மை – பேரினவாத வெறியில் மூழ்கிக் கிடக்கும் சிங்களதுக்கு முதலில் புரிய வேண்டும். புரிந்தால்தான் இந்த முயற்சி வெற்றியீட்டும்.**

# 'சிங்கள – பௌத்த நாடு' என்ற நிலை மாறும் வரை இங்கு எதுவும் மாறாது!

## மனோ கணேசன் திட்டவட்டக் கருத்து



அமெரிக்க யூஎஸ்எய்ட் நிர்வாகி சமந்தா பவருக்கும், இலங்கையின் ஏழு எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், 'இன்று இந்நாட்டில் ஏற்பட்டிருப்பது பொருளாதார பிரச்சினை மட்டுமல்ல. அதையும் மீறிய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி ஆகும். இதற்கு மூல காரணம், இந்நாட்டில், இன்னமும் தீராமல் இருக்கும், தேசிய இனப்பிரச்சினை ஆகும். இதற்கு பிரதான காரணம், இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற நிலைப்பாடு மாறாமல் இருப்பதே ஆகும். பல மொழி, பல இனம், பல கலாசாரம் என்ற கொள்கை முற்று முழுதாக ஏற்கப்படும் வரை உள்நாட்டில் நிலை மாற்றம் ஏற்படாமல் தொடர்கிறது. அதே போல் வெளிநாட்டு மட்டத்தில், இலங்கை கடலில் இந்திய – சீன முரண்பாடு தீவிரமடைகிறது.' – என சமந்தா பவரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் நிகழ்ந்த சந்திப்பில், அமெரிக்க யூஎஸ்எய்ட் நிர்வாகி சமந்தா பவரை, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சஜித் பிரேமதாஸ, மனோ கணேசன், எம். ஏ. சுமந்திரன், ரவூப் ஹகீம், தயாசிறி ஜயசேகர, ரிஷாத் பதுர்தீன், ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இலங்கை பன்மை கலாசார நாடக அதிகாரபூர்வமாக உருவாவதற்கு அமெரிக்கா துணை இருக்க வேண்டும். இதன் மூலம் இனப்பிரச்சினை தீரும் வாய்ப்பு ஏற்படும். அது இலங்கை மக்களது நலனுக்கு மட்டுமல்ல, அமெரிக்கா, இந்தியா நலன்களுக்கும் வாய்ப்பானது.

இலங்கையில் எல்லா காலத்திலும் மிகவும் நிர்க்கதியான பிரிவினராக தோட்டத் தொழிலாளர்களே வாழ்கின்றனர். வறுமை, போசாக்கின்மை, சுகாதாரம், கல்வி, சிறுவர் தொழிலாளர், பெண்கள் மீதான அதீத சுமை ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்கள் தோட்ட தொழிலாளர் மத்தியிலேயே அதிகமாக இருக்கின்றன. இன்றைய நெருக்கடி நிலைமை அவர்களை மேலும் துன்பத்தில் தள்ளியுள்ளது.

நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச நிர்வாக இயந்திரம் பாரபட்சமாக நடக்கிறது. எமக்கு அதன்மீது நம்பிக்கையில்லை. அங்கே அரசியலும், இனவாதமும் இருக்கின்றன. தோட்ட தொழிலாளர்கள் பெரும்பாலும் தமிழர்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைப்பதில்லை.

ஆகவேஅமெரிக்காஉட்படஇலங்கைக்கு உதவிடும் நாடுகள் இதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். இலங்கைக்கு வழங்கும் உதவிகளை சிவில் நிறுவனங்கள் மூலம் வழங்குங்கள். அதுவும் கண்காணிக்கப்பட வேண்டும். உதவி பெறும் பிரிவினர் யார் என்பதை சரியாக அடையாளம் காண வேண்டும்.

இலங்கையில் உரம் வாங்கி மக்களுக்கு வழங்க யூஎஸ்எய்ட் நமது நாட்டு அரசுக்கு வழங்கும் 4 கோடி அமெரிக்க டொலர் உதவிக்கு நன்றி. ஆனால், இந்த 4 கோடி டொலர் உதவி தொகையில் நமது மக்களுக்கு ஒரு டொலரும் கிடைக்காது. ஏனென்றால் தோட்ட தொழிலாளர்கள் விவசாய தொழிலாளர்கள் என்றாலும், சொந்த நிலம் இல்லாதவர்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெறச் சொல்வது நல்லதே. ஆனால், இந்த சட்டத்துக்கு பதில் இன்னொரு சட்டத்தை கொண்டு வந்த பின்னரே அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெறும். ஆகவே உடன் தேவை, சட்டத்தை வாபஸ் பெற சொல்வதை விட, சட்டத்தின் அமுலாக்கலை இடைநிறுத்தம் செய்யக் கூறுவதாகும்.

இன்று சில வாரங்களாக கைது செய்யப்படும், அரகல போராட்டக்காரர்களை விடுதலை செய்ய நாமும் கோருகிறோம். இவர்கள் சில வாரங்களாகக் கைது செய்யப்படுகின்றவர்கள். ஆனால், அதைவிட தமிழ் அரசியல் கைதிகள் நிலைமை படுமோசம். தமிழ் கைதிகள் 5,10,15, 20 வருடங்களாக சிறையில் இருக்கின்றவர்கள். சிலர் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவிக்கிறார்கள். இன்னும் சிலர் வழக்குகளை எதிர்நோக்கி உள்ளனர். இன்னமும் சில தொடர்ந்து தடுப்பு காவலில் உள்ளனர். இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். மீண்டும் வழக்குகள் தொடரக் கூடாது. – என்றார்.

# எந்தெந்தக் குற்றச் சாட்டுக்களுக்காக தண்டனைகளை அனுபவிக்கின்றார்கள்?

## விவரத்தைக் கோருகின்றார் நீதியரசர் விக்கி



எந்தெந்தக் குற்றச் சாட்டுக்களுக்காகத் தண்டனை அனுபவிக்கின்றார்கள் என்ற விவரத்தை தமிழ் அரசியல் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் பெற்றுத் தாருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் உறவுகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்கச் செல்லும் உறவினர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் சிறையில் வாடும் ஒவ்வொரு தமிழ் அரசியல் கைதியும் தற்போது என்னென்ன குறைகளை, பாதிப்புக்களை எதிர்நோக்கி உள்ளார்கள் என்ற விவரத்தையும் தன்னிடம் வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் தகவல்களை முன்வைத்து நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுடன் பேச்சை முன்னெடுக்கவுள்ளதாக க.வி.விக்னேஸ்வரன் அரசியல் கைதிகளைச் சந்திக்கச் செல்லும் உறவினர்களிடம் உறுதியளித்துள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டு அமைப்பின் தலைமமைப் பதவியை ஏற்கிறார் பிரதமர் மோடி

## உஸ்பெகிஸ்தானில் சீன, ரஷ்ய தலைவர்களுடனும் பேச்சு



ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க பிரதமர் நரேந்திரமோடி நாளை (புதன்கிழமை) உஸ்பெகிஸ்தான் செல்கிறார். அங்கு ரஷ்யா, சீன அதிபர்களை அவர் சந்தித்துப் பேசுகிறார்.




உலகின் மிகப்பெரிய பிராந்திய பாதுகாப்பு, ஒத்துழைப்பு அமைப்பாக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு திகழ்ந்து வருகிறது. 8 நாடுகள் உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இந்தியா, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 8 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இதன் பார்வையாளர்களாக உள்ள ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான், மங்கோலியா ஆகிய நாடுகள் முழு உறுப்பினர் ஆவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்த அமைப்பில் பேச்சுவார்த்தை கூட்டாளிகளாக ஆர்மேனியா, அசர்பைஜான், கம்போடியா, நேபாளம், இலங்கை, துருக்கி உள்ளன.

நேரடி உச்சி மாநாடு இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்கள் நேரடியாக கலந்து கொண்ட உச்சி மாநாடு கடைசியாக 2019 ஆம் ஆண்டு கிர்கிஸ்தான் நாட்டின் பிஷ்கேக் நகரில் நடந்தது. அதன் பின்னர் கொரோனா வந்து விட்டதால் இந்த அமைப்பின் தலைவர்கள் நேரடியாக பங்கேற்கும் உச்சி மாநாடு நடைபெறவில்லை. தற்போது உலகமெங்கும் பெருமளவில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஙங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாடு, உஸ்பெகிஸ்தான் நாட்டின் சமர்கண்ட் நகரில் 15, 16 தேதிகளில் (வியாழன், வெள்ளி) நடைபெறுகிறது. அதில் உறுப்பு நாடுகளின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் விவாதிக்கப்படும். பயங்கரவாதத்துக்கு எதிராகவும், பொருளாதார ரீதியில் ஒத்துழைப்பது தொடர்பாகவும் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர்.

### பிரதமர் மோடி பங்கேற்பு

இந்த மாநாட்டில் உஸ்பெகிஸ்தான் அதிபர் வ்கத் மிர்சியோயேவ் அழைப்பின் பேரில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார் என மத்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. மேலும் 14 நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி நாளை (14 ஆம் திகதி உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு புறப்பட்டு செல்கிறார்.

உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு அவர் 16 ஆம் திகதி டெல்லி திரும்புவார். இந்த மாநாட்டில பிரதமர் மோடியுடன் சீன அதிபர் ஜின்பிங்கும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் கலந்து கொள்வது முக்கியத்துவம் பெறுகிறது. இந்த மாநாட்டுக்கு பிற உறுப்பு நாடுகளின் தலைவர்களான பாகிஸ்தான் பிரதமர் பாஸ் ஸெரீப்பும், ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசியும், அழைக்கப்பட்டுள்ளனர்.

### சீன, ரஷ்ய அதிபர்களுடன்

பேச்சு இந்த மாநாட்டின் இடையே




பிரதமர் மோடி, தலைவர்களுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் இல்லை. ஆனாலும்கூட, ஒரே அரங்கிலும், ஒரே ஓய்வறையிலும் தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க வாய்ப்பு




உள்ளது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி பிரதமர் மோடி, சீன அதிபர் ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இந்த பேச்சுவார்த்தை எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி உள்ளது. ஏனென்றால், கிழக்கு லடாக் எல்லைப்பகுதியில் பிரச்சினைக்கு உரிய கோக்ரா – ஹாட்ஸ்பிரிங்ஸ் பகுதியில் இந்திய, சீன படைகள் விலக்கல் தொடங்கி உள்ளது. இதை இரு தரப்பு இராணுவமும் உறுதி செய்துள்ளன. இந்திய, சீன எல்லை மோதலில் இந்த நடவடிக்கை முக்கிய நகர்வாக பார்க்கப்படுகிறது. இதனால் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அந்த பகுதியில் நிலவி வந்த பதற்றம் தணியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சாதகமான தருணத்தில் பிரதமர் மோடியும், சீன அதிபர் ஜின்பிங்கும் சந்தித்து பேசுவது, இரு தரப்பு உறவில் நிலவி வந்த உரசல்களுக்கு முடிவு கட்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்துகிறபோது, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரவும், உக்ரைனுடனான பிரச்சினைகளில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவும் மீண்டும் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா தலைமை ஏற்கும் இந்த மாநாட்டின் முடிவில் சுழற்சி முறையிலான தலைவர் பொறுப்பை இந்தியா ஏற்கும். இந்த அமைப்பின் தலைவர் பொறுப்பில் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் வரை இந்தியா தொடரும். எனவே அடுத்த வருடம் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டை இந்தியா நடத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன அதிபர் ஷீ ஜிங்பிங்கிற்கு கட்டுமட்டில்லா அதிகாரங்கள்

## சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு பீஜிங்கில் அடுத்த மாதம் நடக்கும்போது வழங்குவதற்கு ஏற்பாடு



பீஜிங்,செப்.12

சீனாவில் அதிபர் ஷீ ஜிங்பிங்கிற்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் வகையில், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில், கட்சியின் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடான சீனாவில் கம்யூனிஸ்ட் ஆளும் கட்சியாக உள்ளது. அந்த கட்சியின் பொதுச் செயலரான ஷீ ஜிங்பிங், அதிபர், சீன இராணுவத்தின் தலைவர் ஆகிய பதவிகளிலும் உள்ளார்.

இந்நிலையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு, அடுத்த மாதம் பீஜிங்கில் நடக்கவுள்ளது.

இதில், கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய முடிவுகளை எடுக்கும், 25 உறுப்பினர்கள் அடங்கிய பொலிட் பீரோ கூட்டமும் நடக்கவுள்ளது. இதில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளன எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து சீன கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் கூறியதாவது:

நூற்றாண்டு பழமையான சீன கம்யூனிஸ்ட் கட்சியில் இதுவரை மாவோ மட்டுமே தலைவர் என்ற பொறுப்பை வகித்துள்ளார். அவருக்குப் பின் வந்தவர்கள், பொதுச் செயலர் பொறுப்பை வகித்தனர். தற்போது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பொறுப்பு ஜிங்பிங்கிற்கு வழங்கப்பட உள்ளது. இதற்காக கட்சியின் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட



உள்ளது.

ஜிங்பிங்கின் அதிபர் பதவிக் காலம் இந்தாண்டுடன் முடிவடைகிறது. எனவே, அவர் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக அதிபர் பதவியை வகிக்கும் வகையிலும் சட்டத்தில் திருத்தம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு 6 மாதங்களுக்குமேல் தாக்குப்பிடிக்காது!

## குமார வெல்கம எம்.பி. ஆரூடம்



நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் எதிர்வரும் 6 மாதங்களுக்கு மேல் நீடிக்காது. அந்த அமைச்சரவையில் அங்கத்துவம் பெற ஒருபோதும் தான் எதிர்பார்க்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அங்கத்துவம் பெறத் தயாராக இல்லை.

காரணம் தற்போது அவருடனுள்ள தரப்பினருடன் இணைந்து இந்த அரசாங்கத்தை நீண்ட நாள்கள் கொண்டு செல்ல முடியாது. பொதுஜன பெரமுனவின் சிலருக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவ்வாறு பரிந்துரைக்கப்படுபவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை.

அவ்வாறானவர்களுடன் எம்மாலும் இணைந்து பயணிக்க முடியாது. எதிர்வரும் தேர்தல்களில் நாம் எமது கட்சியிலேயே போட்டியிடுவோம். விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி எம்முடன் இணைந்து பயணிக்குமா என்று கூற முடியாது. ஆனால் அவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதற்கே நாம் முயற்சிக்கின்றோம்.

அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் இணைவார்கள் என்று நான் எண்ணவில்லை. காரணம் இந்த அரசாங்கம் எதிர்வரும் 6 மாதங்களின் பின்னர் நிலைத்திருக்காது என்ற நிலைப்பாடே காணப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று எண்ணுகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவராவார். சஜித் பிரேமதாஸ தற்போதுள்ளதை விட தலைமைத்துவத்தை கைகளில் எடுக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும். – என்றார்.

# தெற்கு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்: சந்தேக நபர்களுக்கு கடும் எச்சரிக்கை

## பொலிஸார் விடுத்துள்ள சவால்

தென் மாகாணத்தில் கடந்த சில மாதங்களாகப் பதிவான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், கொலைகளுடன் தொடர்புடைய அனைவரையும் அடையாளம் கண்டுவிட்டதாக தென் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் றோஹண தெரிவித்தார்.

குற்றவாளிகளை சுதந்திரமாக நடமாட ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும், 6 வாரங்களுக்குள் அனைத்து சம்பவங்களுடனும் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து காட்டுவதாகவும், பொலிஸாரா குற்றவாளிகளா என ஒரு கை பார்த்து விடலாம் எனவும் அவர் சவால் விடுத்தார்.

156 ஆவது பொலிஸ் தின நிகழ்வுகளாக காலி–கோட்டையில் நடந்த விடே கொண்டாட்ட நிகழ்வின் போதே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண இதனைக் குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு –

கடந்த ஜூன் முதலாம் திகதி முதல் தென் மாகாணத்தில் இதுவரை துப்பாக்கிதாரிகளால் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 4 சம்பவங்கள் தொடர்பிலான பூரண விசாரணை நிறைவு செய்யப்பட்டு சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதே போல் துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட ரீ 56 ரக துப்பாக்கிகள், பிரவுனின் ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏனைய சம்பவங்களின் சந்தேக நபர்களையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்த, சந்தேக நபர்கள், அந்தக் கொலைக்காரர்கள், ஆயுதத்தை கையிலெடுத்தவர்கள், குற்றத்தின் பின்னர் மறைந்திருக்க அல்லது சுதந்திரமாக இருக்க முடியும் என நினைப்பார்களாயின், அதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இரு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், 4 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்களின் கீழ் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எமக்கு வழங்கப்பட்டுள்ள சவாலை நாம் ஏற்கின்றோம். பார்க்கலாம் யார் சவாலில் ஜெயிக்கின்றார்ரகாள் என்று. நாமா அல்லது குற்றவாளிகளா என இன்னும் 6 வாரங்களில் விடை தெரிந்துவிடும்.

ஒரு போதும் ஆயுதங்களுடன் நடமாட நாம் அனுமதிக்கப்போவதில்லை. அனைவரையும் அடையாளம் கண்டுள்ளோம். உதவியவர்கள், மறைமுகமாக உதவியவர்கள், எஸ்.எம்.எஸ். அனுப்பியவர்கலில் இருந்து அனைவரையும் கண்டு பிடித்துவிட்டோம். – எனத் தெரிவித்தார்.

# வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

வெளிநாட்டுகளுக்கு வேலைக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடத்தில் 2 லட்சத்து 8 ஆயிரத்து 772 இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலைக்காக சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாடு செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர் என்பதோடு ஒரு லட்சத்து 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் வெளிநாடு சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 5 ஆயிரம் தொழிலாளர்களை கொரியாவுக்கு வேலைக்கு அனுப்ப எதிர்பார்த்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka**

**வணிகமாணி பட்டப்படிப்பு 2019/2020 (வெளிவாரி)**

**Bachelor of Commerce (Hons)Degree Programme – 2019/2020 (External)**

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2022

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிக மாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

* க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2019 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

* பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்

**வணிக முதலாம் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

* ஏற்கனவே வணிக முதலாம் அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்பு கோருவோர், உரிய தகமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

விண்ணப்பப்படிவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அல்லது**

**www.codl.jfn.ac.lk** எனும் இணைய முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1,000 இணை 89006208000063 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி பற்று சீட்டினை விண்ணப்படிவத்துடன் இணைத்து பிரதிப் பதிவாளர்இ திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **'வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் - 2019 / 2020'** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 30.09.2022 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணைய தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**12.09.2022**

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## 'ஏகோபித்த' என்ற மஞ்சள் காமாலை



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 121

இறைமையுள்ள சுதந்திர தமிழீழத்தை இந்திய ஆதரவின்றியும், தங்களது ஆயுத பலத்தாலும், அர்ப்பணிப்புகளாலும், ஶ்ரீலங்காவுக்கு எதிரான தாக்குதல்களால் நிறுவிக் கொள்ளலாம், அதற்கு விடுதலைப் புலிகளின் ஏகோபித்த தலைமையும், பிரபாகரனும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற அவாவிலே



குணதாஸ அமரசேகர

தொடர்ந்த போராட்டம், அதன் சாதுரியம், சாதுரியமின்மை என்பவற்றை விவரித்துக் கொண்டு போவதானால் அவற்றின் ஆராய்வுகளுக்காக இந்தக் கட்டுரை வளர்ந்து, விரிந்து விடும்.

அதனைத் தவிர்த்து, அவ்விடயங்களில் இருந்து எழுந்த விபரீதங்களை புரிந்து கொள்ள சில வரலாற்றுத் தகவல்களையும் எழுந்த அபிப்பிராயங்களையும் மட்டும் இங்கு பார்க்கலாம்.

முன்னர் குறிப்பிட்டமை போல் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த அவர்களது ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை உளவுத்துறைகள், அவர்களுக்கு நேரடியாகவும் தொடர்பாளர்கள் மூலமும் கோடி காட்டி இருந்தன.

பதிலுக்கு இந்தியப் படைகளை அப்புறப்படுத்தும் திட்டம்தான் விடுதலைப் புலிகள் மத்தியில் இருந்தது.

அதுபோலவே, இந்திய படைகளுக்கு எதிராக ஜே.வி.பியின் தாக்குதல்கள் தொடருமானால் தென்பகுதியிலும் இந்தியப் படைகள் நேரடியாக இறங்கலாம் என்பது உளவுத்துறைகள் மூலமும் அந்தப் பகுதிகளை பொறுப்பேற்று கண்காணித்து வந்த இந்தியத் தூதரகத்தின் அரசியல் காரியதரிசி ஹர்தீப் சிங் பூரி மற்றும் உதவி தூதுவர் நிரூபம் சென் போன்றோராலும் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் அரசியல் கட்சி தலைவர்களுக்கும் கூட எடுத்துரைக்கப்பட்டது.




விடுதலைப் புலிகளுக்கு எதிராக அதிரடிகள் தொடங்கியதும், அவர்களின் எதிர்த் தாக்குதலால் நிலைமை முற்றி, தென்பகுதிக்கும் இந்தியப் படைகள் பரந்துக் காலூன்றலாம் என்ற ஐயப்பாடுகள் தோன்றின.

1971 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்ற ஜே.வி.பிக்கும் 1987 இல் இருந்த ஜே.வி.பிக்கும் பல வித்தியாசங்கள் உள்ளன.

1971இல் அவரது அவர்களது அங்கத்தினர்களில் பெரும்பாலானோர் பாமர விவசாயப் பின்புறங்களில் இருந்து வந்தவர்கள். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், அநேகமாக கலைப் பீடங்களில் படித்தவர்களாக இருந்தனர்.

ஆனால் 1987 இல் ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் நாடு மேற்கத்திய நாடுகளுக்கும் நாகரீகத்துக்கும் அடிமைப்படுத்தப்பட்டு விடும், ஆகவே நாட்டையும் பௌத்த மதம், அதன் கலாச்சாரங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தேசியவாதிகளுக்கு உண்டு, எனவே பரந்தபட்ட குழாம்கள் உருவாக, அவை 'ஜாதிக சிந்தனய' (Jathika Chinthanaya) என்ற குடையின் கீழ் இயங்கி, அரசியல் ரீதியாக



நளின் டி சில்வா

ஜே.வி.பியுடன் நல்ல உறவுகளைப் பேணி அவர்களது தேசியப்பற்றின் சிந்தனைக் கூடங்களாகவும் மாறி இருந்தன.

'ஜாதிக சிந்தனய'வின் உறுப்பினர்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்திலிருந்து பல துறைகள் சார்ந்த புத்திஜீவுகளும் பல்கலைக்கழக படிப்புகளால் பட்டம் பெற்று உத்தியோகங்களுக்காக நாட்டுப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு குடியேறி இருந்த பல இளைஞர்களையும் கொண்டிருந்தனர்.

ஜாதிக சிந்தனையாவின் புத்திஜீவிகள் திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் – வர்த்தகங்களின் மேம்பாடுகளால் – சிங்கள, பௌத்த கலாச்சாரம் அழிந்து விடும், அவை பாதுகாக்கப்பட வேண்டும் என எழுதிய பிரச்சார கட்டுரைகள் பத்திரிகைகளில் முக்கிய இடங்களைப் பிடித்தன.

அவர்களது கருத்தாக்கங்களில் பலர் பங்குபற்ற, இவற்றால் ஜாதி சிந்தனய, வளரும் சிங்கள பௌத்தத்தின் காவலனாகவும், காலனித்துவ காலத்திலிருந்து வெள்ளைக்காரர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்து, அவர்களது வாழ்க்கையை மேலும் கொண்டு செல்ல விரும்பும் முதலாளி வர்க்கத்தினருக்கு எதிரானதாகவும் பார்க்கப்பட்டது.

இப்படியான பார்வைதான் இப்போது பெருமளவில் காலிமுகத்திடல் போராளிகளை ஒட்டியும் பார்க்கப்பட்டது.

ஜாதிக சிந்தனயவின் முக்கிய, பிரபல்யம் பெற்ற புத்திஜீவிகளாக குணாதாஸ அமரசேகர, நளின் டி சில்வா போன்றவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் ஜே.வி.பியின் தேசிய கொள்கைகளுக்கு ஆதரவு தந்ததாலும், 1987 இல் ஜே.வி.பி. அமைப்பு ஜே.ஆருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கிய போது அதை வரவேற்றாலும், அது வன்முறை வடிவமாவதை அவர்கள் விரும்பவில்லை.

குணதாஸ அமரசேகர போன்றோர் சமுதாயப் புரட்சியும், சோசலிசமும் சிங்கள, பௌத்த மக்களை அடிப்படையாக வைத்துக் கட்டி எழுப்பப்பட வேண்டும் எனவும், அதற்காகக் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் உள்வாங்கப்பட்டு, அங்குள்ள இளைஞர்கள் சமுதாயப் புரட்சிகளை மேல் எடுப்பதற்கு பயிற்றப் படுதல் வேண்டும் என்ற கருத்துகளைக் கொண்டிருந்தார்கள்.

சிங்கள, பௌத்த மக்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படும் தேசியப் போராட்டத்தில் சிறுபான்மையினரை இணைக்க முனைவது கூடையில் இருக்கும் ஆரஞ்சுப் பழங்களை இரண்டு கைகளாலும் சேர்த்து பொறுக்குவதற்கான முயற்சி போன்று ஒருபோதும் கைகூடாது என்பது அவர்களது வாதம்.



ஜே.ஆர்.

ஆகவே ஜே.வி.பி. சிங்கள மக்களையே 1987 இல் கூட மையப்படுத்தி இயங்கியமையும், தமிழ் பகுதிகளில் பலமான அமைப்புகளை அமைக்காதமையும் அவர்களது இனப்பிரச்சினைக்கான அணுகுமுறைகளிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.

தமிழ் அரசியல் புத்திஜீவி தரப்புகள் இப்படியான செயற்பாடுகளை அங்கலாய்ப்புடன் கவனித்தார்களே ஒழிய, காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முயற்சித்தார்கள் இல்லை. பேரினவாதத்தின் வளர்ச்சிக்கு எதிராக என்னதான் செய்ய முடியும் என்ற மனோபாவங்களையே வளர்த்தார்கள்.

ஆனால் தமிழ் இளைஞர்களோ இவர்களுக்கெல்லாம் பதிலடி தமிழ் மக்கள் பிரிந்து போவதும், அதற்காக ஆயுதங்களை ஏந்துவதும்தான் என்ற கொள்கைப்பாட்டை மேற்கொண்டார்கள்.

(வளரும்...)



# அரசியல் கைதிகளை பார்வையிடச் சென்ற பெண்கள் அசிங்கப்படுத்தப்பட்டார்களாம்!

## ரெலோ தலைவர் செல்வம் எம்.பி. வேதனை தெரிவிப்பு

தமிழ் அரசியல் கைதிகளைஒ பார்வையிடச் சென்ற அவர்களது உறவினர்களான பெண்களை மிகவும் மோசமாக சோதனை செய்து அவர்களை அசிங்கப்படுத்தியமையுடன், இனவாதமாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் நடந்து கொண்டுள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் நேற்று மதியம் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கைதிகள் தினத்தை முன்னிட்டு தங்களது உறவுகளை சிறைச்சாலைகளில் பார்வையிடச் சென்ற சொந்தங்கள் மிக மோசமான முறையில் பரிசோதனை செய்யப்பட்டுள்ளார்கள்.

பெண்கள் மிகவும் மோசமாக முறையில் சோதிக்கப்பட்டுள்ளார்கள். அசிங்கமான வார்த்தைகளை பிரயோகித்துள்ளார்கள்.

சிறைச்சாலையில் உள்ள தேவாதாசன் என்பவரை பார்க்கச் சென்ற அவரது மகளை மிக மோசமாக பரிசோதனை செய்த நிலையில், அந்தச் சகோதரி அதற்கு எதிர்ப்பை காட்டிய போது, அவர்கள் சிங்களத்தில் இது எங்களது சிங்கள நாடு எனக் கூறியுள்ளார்கள். மிகவும் இனவாதத்தோடு மோசமாக சிறை அதிகாரிகள் நடந்து கொண்டுள்ளார்கள்.

சிறைச்சாலை தினம் என்பது எல்லோரும் வந்து பார்வையிடும் ஒரு நாள். நவீன முறையில் பல சிறைச்சாலைகளில் பரிசோதனை முறைகள் உள்ளன. அதை விடுத்து இனதுவசத்தோடு மிகவும் மோசமாக நடந்து கொண்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தவுள்ளோம்.

இவ்வாறான நிலையில் இந்த நாட்டில் தமிழ் மக்களுடைய தீர்வினையும், அவர்களது உணர்வுகளையும், சரி செய்வது என்பது கேள்விக் குறிசியாகவே உள்ளது.

ஜனாதிபதி தனது உரையில் தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். ஆனால் அதற்கு நேருக்கு மாறாக பல விடயங்கள் நடந்து வருகின்றன..

நிலங்கள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டு வருகின்றது. அரசியல் கைதிகள் விடுதலை கேள்விக்குறியாகவுள்ளது. அவர்கள் தற்போது உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு எமது ஆதரவு உண்டு. அவர்களது விடுதலைக்காக நாங்கள் முயற்சிப்போம்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சொல்லப்பட்ட விடயங்களை நிறைவேற்றாவிட்டால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காது.

சிறைக்கைதிகளின் விடுதலை நடைபெறவில்லை. பார்வையிடச் செல்பவர்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளார்கள். நிலங்களை அபகரிக்கும் நிலை தொடர்கிறது.

பத்திரிகையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தேசத்திற்காக குரல் கொடுத்தவர்கள் என பலரை ரி.ஐ.டி.



அழைத்து விசாரணை செய்கிறது.

வடக்கு, கிழக்கில் 15 பேருக்கு மேல் அழைக்கப்பட்டுள்ளார்கள். நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் உரையாற்றியுள்ளோம். எதற்காக இந்த விசாரணை? இது தேவையற்றது.

பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையில் அதனை நிவர்த்தி செய்ய புலம்பெயர் உறவுகளை முதலீடு செய்ய அழைக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு வரும் போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் நொண்டி சாட்டுக்களை சொல்லி அதனை பறிக்கப் பார்க்கிறார்கள்.

இதனை தமிழ் தரப்பு தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. தமிழ் மக்களை நசுக்கிக் கொண்டிருந்தால் இந்த நாடு பொருளாதாரத்தில் நெருக்கடியில் இருந்து மீள முடியாது. எனவே எமது மக்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். - எனத் தெரிவித்தார்.

## இலங்கையின் நிலைமை குறித்து ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவுன்சிலின் அமர்வு நேற்று ஆரம்பித்த நிலையில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் பதில் ஆணையாளர் நாதா அல் நஷீப், இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் நல்லிணக்கத்திற்கு தேவையான உரையாடலை உருவாக்குவதற்கும் புதிய அரசாங்கத்தை ஊக்குவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் சீர்திருத்தங்கள் முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், குற்றம் செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனங்களின் சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 18 அன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் மூன்று மாணவர் செயற்பாட்டாளர் தலைவர்களை கைது செய்து காவலில் வைத்தது வருந்தத்தக்கது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதை அடுத்து இலங்கை தொடர்பில் பல்வேறு நாடுகளும் தத்தமது சுருக்க குறிப்புகளை கூட்டத்தில் முன் வைத்தன.

தற்போது நிலவும் நெருக்கடியானது, இலங்கையில் மனித உரிமைகள் மேலும் சீர்குலைவதற்கு வழிவகுக்கும் என்று கனடா கவலை வெளியிட்டுள்ளது. குறிப்பாக நாட்டின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு தற்போதைய நெருக்கடியானது மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அது கூறியுள்ளது.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாடு உட்பட, போராட்டக்காரர்கள் மீதான சமீபத்திய நடவடிக்கை குறித்து நியூசிலாந்து கவலை வெளியிட்டுள்ளது. மேலும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் முக்கியமானவை என்றும் நியூசிலாந்து மீண்டும் வலியுறுத்தியது.

அத்தோடு இலங்கையின் நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலை அமுல்படுத்துவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஆஸ்ரேலியா அறிவித்துள்ளது.

இதேவேளை 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பான பிரச்சினைகளில் முன்னேற்றம் இல்லாதது குறித்து பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு பொறுப்புக்கூறல் செயன்முறைகள் நடைபெறாதமை காரணமாக இலங்கையில் சாட்சியங்களை சேகரிக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பணி தொடர வேண்டும் என்றும் அது கேட்டுக்கொண்டுள்ளது.

அதேநேரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் முழுமையாக ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் என பிரான்ஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

குறிப்பாக, இலங்கை அரசாங்கம் தனது நீதித்துறையின் சுதந்திரத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது.

## மட்டு. மாவட்டத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மாவட்டத்தில் உள்ள சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், அரசியல்வாதிகள், ஒரு சில ஊடகவியலாளர்கள், பெண்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் உட்பட 10 பேரை முறைப்பாடு கள் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு கடந்த வாரம் தொடக்கம் ஒவ்வொருவருக்கும் திகதி குறிப்பிட்டு தமது காரியாலயத் துக்கு வருமாறு கடிதங்களை அவர்களது வீடுகளுக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் சென்று கையளித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்வர்கள் பலர் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு சீனா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவாவில் இன்று ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லிணக்கத்தைப் பாதுகாக்க இலங்கை மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளை சீனா பாராட்டுவதாகவர் குறிப்பிட்டார்..

இதேவேளை, சமூக ஸ்திரத்தன்மையைபேணுவதற்கும், இறையாண்மை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கைக்கு பலமான ஆதரவு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கான சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார்.




# புலம்பெயர் தொழிலாளர்களால் இலங்கைக்கு கிடைத்துள்ள 32 கோடியே 50 லட்சம் டொலர்!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தகவல்




2022 ஆம் ஆண்டு வெளிநாடுகளில் இருந்து புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பிய லட்சம் டொலர்களைக் கடந்துள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜுலை மாதத்தில் 27 கோடியே 90 லட்சம் அமெரிக்க டொலர்களாக இருந்த வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பிய தொகை ஒகஸ்ட் மாதத்துக்குள் 4 கோடியே 60 லட்சம் அமெரிக்க டொலர்களாக அதிகரித்து 32 கோடியே 50 லட்சம் டொலர்களாகப் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜுலை மாதத்துடன் ஒப்பிடும் போது, வெளிநாட்டு ஊழியர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒகஸ்ட் மாதத்தில் 16.4 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே சட்டரீதியாக வங்கி முறை மூலம் பணம் அனுப்பிய ஒவ்வொரு புலம்பெயர்ந்த தொழிலாளிக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடு அந்நிய செலாவணி பற்றாக்குறையை எதிர்நோக்கும் இந்த நேரத்தில் அனைத்து இலங்கையர்களுக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் ஆதரவு தேவை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டு இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளியேறுவதற்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்தைக் கடந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு 3 லட்சம் தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்ப இலக்கு இருந்த நிலையில், வெளிநாடுகளில் தொழிலாளர்களின் தேவை அதிகரிப்பு காரணமாக இந்த இலக்கு 3 லட்சத்து 30 ஆயிரம் ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது நாளாக கையெழுத்து வேட்டை!






பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றும் முன்னெடுக்கப்பட்டது.

யாழில் இன்று மூன்றாவது நாளாக வடமராட்சியில் இந்த ஊர்திவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சியில் வல்லை முனியப்பர் கோயில் முன்பாக தேங்காய் உடைத்து ஊர்திவழிக் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஊர்திவழிப் போராட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹற்றன் - நுவரெலியா வீதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

## சி.சி.ரி.வி. கமெரா பதிவுகளின் அடிப்படையில் விசாரணை

ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை மேபீல்ட் சந்தியில் வீதி ஓரத்தில் இருந்து மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மொரஹல, பலாங்கொடை, மெதகமமெத்த பகுதியைச் சேர்ந்த நதீர சம்பத் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட சடலத்தின் உடலில் வெளிப்புற காயங்கள் இருந்தன எனவும், அருகில் இருந்த கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு சி.சி.ரி.வி. கமெராவில் அந்த நபர் விபத்தில் சிக்குவது பதிவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த விபத்தை ஏற்படுத்திய நபர்கள் தொடர்பில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட நபர் தலவாக்கலை பிரதேசத்தில் உள்ள மீன் கடையொன்றில் பணிபுரிபவர் எனத் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக் கின்றனர். இதனையடுத்து நீதிமன்ற உத்தரவைப் பெற்று மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தடயவியல் பிரிவு பொலிஸாருடன் இணைந்து திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இளைஞர்களைக் காதலிப்பதாக வலையில் வீழ்த்தி பணமோசடி செய்த பெண் நீர்கொழும்பில் சிக்கினார்!

நீர்கொழும்பைச் சேர்ந்த யுவதி காதல் என்ற பெயரில் முன்னெடுத்த மோசடி நடவடிக்கை தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

17 வயதுடைய யுவதி டிக்டோக் சமூக வலைத்தளம் மூலம் இளைஞர்களுடன் பழகி, பின்னர் அந்த இளைஞர்களை (காதலன்) தான் வசிக்கும் கொச்சிக்கடைக்கு அழைத்துவந்து பணம் பறிப்பதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி யுவதி தனது உண்மையான காதலன் மற்றும் அவரது நண்பர்களுடன் இணைந்து இளைஞர்களை அழைத்து வந்து சிறைப்படுத்தி கப்பம் பெறுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த கும்பல் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டிற்கமைய, கொச்சிக்கடை பொலிஸ் நிலைய தலைமை ஆய்வாளர் ஸ்ரீநிகா ஜெயக்கொடியின் வழிகாட்டுதலின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அந்த கும்பலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துக்கு முகம் கொடுத்தவர்களில் ஒருவர் பசறை பிரதேசத்தில் உள்ள தனியார் ஆயுர்வேத வைத்தியசாலையில் பணி புரிபவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சமூக வலைதளமான டிக் டாக் மூலம் இளைஞர் ஒருவர் சந்தேக நபரான யுவதியுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். அப்போது சந்தேக நபர் அந்த இளைஞனிடம் பணம் கேட்டுள்ளார்.

தற்போது தன்னிடம் பணம் இல்லை என அந்த இளைஞன் தெரிவித்ததையடுத்து அந்த உறவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது.

# மின் கட்டணத்தை செலுத்த தவறியுள்ள பல நிறுவனங்கள்

வீடுகள், சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் பாரிய அரச நிறுவனங்கள் உட்பட மொத்த நுகர்வோர், இலங்கை மின்சார சபைக்கு கடந்த ஜுன் மாத 30 ஆம் திகதி வரை 1400 கோடியே 60 லட்சம் ரூபா கொடுப்பனவுகளை செலுத்தத் தவறியுள்ளனர்.

இதில் 900 கோடியே 56 லட்சம் ரூபா கட்டணங்கள், சாதாரண வீட்டுப்பாவனையாளர்களின் கட்டணங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் இந்த நிலுவைத் தொகையை வசூலிப்பது இன்றியமையாதது. எனவே, மின்சார நுகர்வோர் தங்கள் நிலுவைத் தொகையை விரைவில் செலுத்த வேண்டும் என்று மின்சாரசபை கோரியுள்ளது.

தரவுகளின்படி, ஜுன் 30 ஆம் திகதிக்குள் தொழிற்சாலைகள் செலுத்தத் தவறிய கட்டணப் பெறுமதி 200 கோடியே 70 லட்சம் ரூபாக்களாகும்.

அடுத்த அதிகபட்ச நிலுவைத் தொகையான 87 கோடி ரூபாக்கள், இராணுவம், பொலிஸ்,சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள்.

கல்வி, உள்ளூராட்சி சபைகள் மற்றும் இலங்கை ரயில் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து செலுத்த வேண்டியுள்ளது 69 கோடியே 70 லட்சம் ரூபாக்களாகும். விருந்தகங்களும் சுற்றுலா விருந்தகங்கள் 19 கோடியே 60 லட்சம் ரூபாய்களையும் செலுத்தவேண்டியுள்ளன.

இந்தநிலையில் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சார கட்டணத்தை குறித்த மத வழிபாட்டுத் தலங்களே செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மின்சார சபை கட்டணத்தை அதிகரித்துள்ள நிலையில் மத நிறுவனங்களுக்கு 500 சதவீதத்துக்கும் அதிகமான கட்டண உயர்வு விதிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பிரிவு நுகர்வோர் தங்கள் கட்டணத்தைச் செலுத்த ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# மரக்கறிகளின் விலைகள் நாட்டில் மீண்டும் அதிகரிப்பு



கடந்த நாள்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒரு கிலோகிராம் போஞ்சி 600 ரூபாவுக்கும், கரட் ஒரு கிலோ 400 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கறி மிளகாய் 800 ரூபாவுக்கும் கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 400 ரூபா வரையும் அதிகரித்துள்ளது. அதேநேரம் வெள்ளரிக்காய், பீர்க்கங்காய் மற்றும் மரவள்ளிக்கிழங்கு என்பவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த போகத்துடன் ஒப்பிடும் போது பெரிய வெங்காய பயிர்ச்செய்கைக்கு பாரிய செலவீனத்தை ஏற்க வேண்டியுள்ளதாக பெரிய வெங்காய பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2022இல் வெளியிடப்பெற்றது.